**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 132/2015**
**C/W. OS. 169/2019**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.03.2026 | | |
| பெயர்: | ராஜா<br>(DW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | நடேசன் |
| கிராமம்: | மாங்கனாம்பட்டு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | ஓட்டுநர் | வயது : | 46/2026 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 25.03.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.40)**

1. தாவா சொத்து என்பது புல எண்.262/H/46 என்றால் சரிதான். மேற்படி சொத்தின் நான்கெல்லை என்பது தெருவுக்கு கிழக்கு, மல்லிகா மற்றும் ஜெயராமன் மனைக்கு தெற்கு, எனது மனைக்கு மேற்கு, முனியன் மனைக்கு வடக்கு என்றால் சரிதான். ராமலிங்கம் சுவாதீனம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. தாவா சொத்தை பொறுத்து நில அளவையர் மூலமாக அளக்கப்பட்டு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் 39 ச.மீ. எனது அனுபவத்தில் ஆக்கிரமிப்பில் உள்ளது என்று நில அளவையர் குறிப்பிட்டு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சுவாதீனம் கேட்டு அ.வ.எண்.169/2019 வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சொத்து விபரத்தில் B அட்டவணை

சொத்தாக அ.வ.132/2015 வழக்கில் A அட்டவணை சொத்தை தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த IA.02/2022 மனுவானது முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. IA.02/2022 மனுவின் உத்தரவிற்கு எதிராக இந்நாள் வரை மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. நான் மேல்முறையீடு செய்யாதது சம்மந்தமாக ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த வழக்கில் புல எண்.262/H/13 ன் புதிய புல எண் தான் 262/H/46 என்று கட்சி செய்துள்ளேன் என்றால் இல்லை. புல எண்.262/H/13 என்பது வேறு, 262/H/46 என்பது வேறு என்றால் இல்லை, 262/H/13ல் எங்களுக்கு தெரியாமல் 262/H/46 உட்பிரிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

5. புல எண்.262/H/13 என்பது வேறு, 262/H/46 என்பது வேறு என்றாலும் வழக்கிற்காக ஒரே எண்ணில் 262/H/46 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரத்தை நில அளவையர் அளக்கும்போது அவரிடம் கூறினேனா என்றால் கூறினேன். நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் நில அளவையர் 262/H/13 ன் உட்பிரிவு தான் 262/H/46 என்று கூறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, ஆனால் நில அளவையர் அளக்கும் சமயத்தில் மேற்கண்ட விபரத்தை சொன்னேன், ஆனால் நில அளவையர் நீதிமன்ற உத்தரவு படி மட்டும் தான் அளக்க முடியும் என்று கூறிவிட்டார்.

6. 262/H/13 ன் உட்பிரிவு தான் 262/H/46 என்று உறுதிபடுத்த வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இதுநாள் வரையில் 262/H/13 ன் உட்பிரிவு தான் 262/H/46 என்று உறுதிபடுத்த உட்பிரிவு மாற்ற அறிக்கை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். புல எண்.262/H/13 என்பது வேறு, 262/H/46 என்பது வேறு என்பதால் என்னால் வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையுடன் பட்டா மாறுதல் செய்தது தவறு என்று மேல்முறையீடு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக மனு தாக்கல் செய்துள்ளேன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. புல எண். 262/H/46ல் தான் ராமலிங்கம் பிறந்தார் என்றால் இல்லை.

8. புல எண். 262/H/46யை பொறுத்து வாதியின் தந்தையார் பெயரில் வா.சா.ஆ.1 ஆவணம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் நீண்ட அனுபவம் மற்றும் உரிமையை வைத்துதான் வா.சா.ஆ.1 ஆவணம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வாதி ராமலிங்கம் புல எண். 262/H/46ல் தான் பிறந்தார் என தெரியவருகிறது என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 13.06)**